## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
## அ.வ.எண். 107/2013

பெயர் : சந்திரசேகர்
சாட்சி – வா.சா–4 நாள்: 29.08.2024

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2024ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ம் நாள் சாட்சியம்.

---

**குறுக்கு விசாரணை**

1. ஒரு சொத்தின் உரிமையாளர் தனக்குள்ள உரிமையை மூன்றாம் நபருக்கு கிரையம், பரிவர்த்தனை, செட்டில்மெண்ட் மூலம் மாற்றம் செய்யும்போது மேற்படி சொத்திற்குரிய பட்டா மற்றும் வருவாய் ஆவணங்கள் மேற்படி சொத்தினை எழுதி பெறும் நபர் பெயரில் மாற்றம் செய்யப்படும் என்றால் சரிதான். ஒரு நபர் நீண்ட காலம் அனுபவத்தில் இருந்தால் அனுபவத்தில் இருப்பவரின் பெயரிலும் பட்டா மாறுதல் செய்யப்படும் என்றால் சரியல்ல. அனுபவத்தின் பெயரில் பட்டா வழங்கப்படுவதில்லை.

2. பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய மனு கொடுக்கப்பட்டால் அந்த மனுவினை வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் மூலமாக பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டி கொடுக்கப்பட்ட சொத்தின் அருகில் உள்ள சொத்துக்களின் உரிமையாளர்கள் மற்றும் மனுதாரர் போன்றவர்களை விசாரித்து அவர்களின் அனுபவம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு பட்டாவில் பெயர் மாற்றம் செய்து கொடுக்கப்படும் என்றால் சரிதான். முன்பு அந்த முறை கடைக்குப் பிடிக்கப்பட்டு வந்தது. தற்போது அனைத்தும் இணைய வழி மூலமாக விண்ணப்பங்கள் பெறப்பட்டு விண்ணப்பம் முதலில் கிராம நிர்வாக அலுவலருக்கு அனுப்பப்பட்டு அதன் பின்னர் மண்டல துணை வட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு விசாரணையின் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்படும்.

3. சொத்தில் ஏதேனும் விவகாரம் உள்ளதா என்றும், சொத்திற்கு கூட்டு உரிமையாளர்கள் இருந்தால் யார் யாருக்கு பங்கு உள்ளது என்பதையும் விசாரித்து வட்டாட்சியர் தான் பட்டா வழங்குவார் என்றால், வட்டாட்சியரின் சார்பாக மண்டல துணை வட்டாட்சியர் பட்டா வழங்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சொத்திற்கு கூட்டு

உரிமையாளர்கள் இருந்தால் கூட்டு பட்டா வழங்கப்படுவது வழக்கம் என்றால் சரிதான். பட்டா பாஸ்புக் தற்போது வழங்கப்படுகிறதா என்றால் தற்போது பட்டா பாஸ்புக் வழங்கும் வழக்கம் இல்லை.

4. பட்டா பாஸ் புக் வழங்கப்பட்ட காலத்தில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோர்களின் பரிந்துரையின் பேரில் வட்டாட்சியர் சொத்தினை பார்வையிட்டு விசாரணை மேற்கொண்டு உரிய நபர்களுக்கு பட்டா பாஸ் புக் வழங்கி வந்தார் என்றால் சரிதான். இந்த வழக்கின் சம்பந்தப்பட்ட சர்வே எண்.89 கொண்ட சொத்து தற்சமயம் பல உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சம்பந்தப்பட்ட சர்வே எண். 89 இன் உட்பிரிவுகளுக்கான பட்டா அதன் உண்மையான உரிமையாளர்களுக்கும், அனுபவத்தில் இருப்பவர்களுக்கும் தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. இந்த வழக்கின் சம்பந்தப்பட்ட சர்வே எண்.89 உட்பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட பட்டா சம்பந்தமாக ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் ஆட்சேபனை தெரிவிக்கும் நபர்கள் வருவாய் கோட்டாட்சியருக்கு மேல் முறையீடு தான் செய்ய வேண்டும் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2024.08.29 18:20:48 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.